**KA** முதல் மாதிரிப் பொதுத் தேர்வு - ஜனவரி 2020

பதினொன்றாம் வகுப்பு பதிவு எண்: | | | | | |

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

## வரலாறு

### பகுதி - அ

20×1=20

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

1. வரலாற்றின் பழமையான காலம் ........... ஆகும்.

அ) பழங்கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) செம்புக்காலம் ஈ) இரும்புக்காலம்

2. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்.

i) சேனாணி - படைத்தளபதி

ii) கிராமணி - கிராமத் தலைவர்

iii) பாலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது

iv) புரோகிதர் - ஆளுநர்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

அ) i) ஆ) ii) இ) iii) ஈ) iv)

3. வட இந்தியாவில் 16 மகாஜன பதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ......... ஆகும்.

அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

4. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் .........

அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்

இ) சர்ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

5. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக்கொணர்க

i) களப்பிரர்கள் கவியரசர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

ii) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்

iii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்

iv) இச்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்

அ) i) ஆ) ii) இ) iii) ஈ) iv)

6. .......... பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அ) அரிக்கமேடு ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்

7. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக்கோயில் இல்லை?

அ) உதயகிரி குகை (ஒடிசா) ஆ) அஜந்தா - எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

இ) எலிபெண்டா குகை (மகாராஷ்டிரா) ஈ) பர்க் குகை (மத்தியப் பிரதேசம்)

8. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?

அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்ஷிகா

இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்

9. *தேர்ந்தெடுத்துப் பொருத்துக:*

i) சிம்ம விஷ்ணு - 1. சாளுக்கியர்

ii) முதலாம் ஜெயசிம்மன் - 2. ராஷ்டிரகூடர்

iii) முதலாம் ஆதித்தன் - 3. கப்பல் தளம்

iv) மாமல்லபுரம் - 4. சோழ அரசன்

அ) 4, 3 , 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 2, 1, 4, 3 ஈ) 4, 3, 2, 1

10. 8 - ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின் போது சிந்து அரசர் ......... ஆவார்.

அ) ஹஜ்ஜஜ் ஆ) முகமது - பின் - காஸிம் இ) ஜெயசிம்ஹ ஈ) தாகிர்

11. ............ பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.

அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

12. முகம்மது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் ..........

அ) பெரார் ஆ) பீஜப்பூர் இ) பீடார் ஈ) அகமதுநகர்

13. *கூற்று :* மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.

*காரணம் :* அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்

அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

ஆ) கூற்று தவறு, காரணம் தவறு

இ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

14. கீழே உள்ள ஆட்சியாளர்களுள் யார் அக்பரின் சமகாலத்தவர் இல்லை?

அ) இங்கிலாந்தின் எலிசபெத் ஆ) ஷேக்ஸ்பியர்

இ) பிரான்ஸின் நான்காம் ஹென்றி ஈ) இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி

15. *கூற்று :* மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயர் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது

*காரணம் :* இத்தோல்வி மராத்தியருக்கும், முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று சரி, காரணம் தவறு

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

ஈ) கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

16. *பொருத்துக :*

i) சாமரின் - 1. அச்சுப்பதிப்பு

ii) ஹென்றிக்ஸ் - 2. ஹைதராபாத்

iii) முஜாபர் ஜங் - 3. சந்தா சாகிப்

iv) ஆற்காட்டு நவாப் - 4. கள்ளிக்கோட்டை அரசர்

அ) 4 1 2 3 ஆ) 4 3 2 1 இ) 3 2 1 4 ஈ) 2 1 4 3

17. இந்தியாவில் முதல் ஆங்கிலேய ஆளுநராக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்

அ) காரன்வாலிஸ் ஆ) கானிங் இ) வெல்லெஸ்லி ஈ) வாரன்ஹேஸ்டிங்ஸ்

18. வேலூர் புரட்சிக்கு உடனடிக்காரணமாக அமைந்த நிகழ்வு ........... ஆகும்.

அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள் ஆ) நவீன சீருடை மாற்றம்

இ) புதிய தலைப்பாகை ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

19. கீழ்வரும் போர்களை காலகிரமப்படி வரிசைப்படுத்தவும்

i) பக்சார் போர் ii) வந்தவாசிப்போர் iii) பிளாசிப்போர் iv) ஆம்பூர் போர்

அ) ii), iv), iii), i) ஆ) iv), ii), i), iii) இ) iv), ii), iii), i) ஈ) iii), ii), iv); i)

20. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு ஆட்சி புரிந்தவர்களைக் காலவரிசைப்படி எழுதவும்.

அ) ராஜாராம், சாம்பாஜீ, சாஹூ, இரண்டாம் சாம்பாஜி

ஆ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹூ

இ) சாம்பாஜி, சாஹூ, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி

ஈ) சாம்பாஜி, ராஜாராம், சாஹூ, இரண்டாம் சாம்பாஜி

## பகுதி - ஆ

**II.** ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **7×2=14**

21. சார்வாகம் குறித்து அறிந்ததைக் கூறுக.
22. அலெக்சாண்டரின் படையடுப்பு எந்த வகையில் இந்திய வரலாற்றில் திருப்புமுனையாக விளங்கியது?
23. யுவான்- சுவாங் காஞ்சிபுரத்தில் கண்டது என்ன?
24. ஐஹொல் கல்வெட்டு குறித்துச் சிறுகுறிப்பு வரைக.
25. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகளைக் கூறுக.
26. பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் யாவை?
27. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
28. ஆங்கிலேயர் மதராஸில் தங்களது குடியேற்றத்தை எவ்வாறு நிறுவினர்?
29. முதலாம் முகமது பற்றி நீங்கள் அறிந்தது என்ன?
30. பெருங்குளம் : சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - இ

**III.** ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **7×3=21**

31. இந்தியாவின் இடைப்பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகளை எழுதுக.
32. ரிக்வேதகால சமூகப்பிரிவுகளைக் கோடிட்டு எழுதுக.
33. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.
34. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

35. விக்ரமசீலா பல்கலைக்கழகம் குறித்துச் சிறுகுறிப்பு தருக.
36. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்
37. ராக்சஷிதங்கடி போர் (1565)
38. மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள்
39. பக்தி இயக்கத்தின் விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.
40. "ஆனந்தரங்கர் நாட்குறிப்பு"

பகுதி - ஈ

7×5=35

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

41. அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

42. அ) இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் எவை?

**(அல்லது)**

ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும்.

43. அ) கலைக்கும், இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

**(அல்லது)**

ஆ) 'குப்தர்காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்' விவாதிக்கவும்.

44. அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?

45. அ) விஜயநகர ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை பற்றி விவரி.

**(அல்லது)**

ஆ) ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழிவகுத்தது?

46. அ) இந்தியாவில் போர்த்துக்கீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி.

**(அல்லது)**

ஆ) 1806 ஆம் ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும் போக்கினையும் விவரிக்கவும்.

47. அ) *இந்திய வரைபடத்தில் ஹர்ஷவர்த்தனர் பேரரசு எல்லையை வரைந்து கொடுக்கப்பட்டுள்ள இடங்களைக் குறிக்கவும்.*

i) கன்னோசி ii) உஜ்ஜையினி iii) பிரயாகை iv) ராஜகிருகம்

**(அல்லது)**

ஆ) சிவாஜியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து நிகழ்வுகள் குறித்து காலக்கோடு வரைந்து அவற்றினை விவரிக்கவும்.